**இலங்கை சூழல்சார் உயர் தொழிலாளர்கள் நிறுவனம் - 2025**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இலங்கை சூழல்சார் உயர் தொழிலாளர்கள் நிறுவனத்தின் 2025 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள் மற்றும் பொருண்மையான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2025 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகள் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிறுவனத்தின் 2025 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவனம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிறுவனத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை

இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிறுவனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் நிறுவனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில்

குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இயலுமான அளவில் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிறுவனத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிறுவனத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் நிறுவனம் இணங்கியிருந்ததா என்பதும்,

- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதுடன் தொடர்புடைய கணக்காய்வு அவதானிப்புகள்

### 1.5.1 சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளுக்கான இலங்கை கணக்கீட்டு நியமம் 07 இன் பிரகாரம் காசுப்பாய்ச்சல் கூற்றை தயாரிக்கும் போது செயற்பாட்டு நடவடிக்கையின் கீழ் செலுத்த வேண்டிய மற்றும் பெற வெண்டிய கணக்குகளில் வருட ஆரம்ப மற்றும் இறுதி மீதிகளில் வித்தியாசம் | 2024 ஆண்டிற்குரியதாக ஒதுக்கப்பட்ட ரூபா 75,000 ஆன கணக்காய்வு கட்டணம் குறை ஒதுக்கமானதால் 2025 ஆண்டில் அது செம்மையாக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் வித்தியாசம் ரூபா 110,800 ஆக உள்ளது. தங்களால் செய்யப்பட்ட | கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க காசுப்பாய்ச்சல் கூற்றை தயாரிக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| செயற்படு மூலதன வேறுபாட்டினுள் காண்பிக்கப்பட வேண்டிய போதும் 2025 ஆண்டு இறுதியில் செலுத்த வேண்டிய மீதியின் அதிகரிப்பான ரூபா 178,217 ஆன தொகை காசுப்பாய்ச்சல் கூற்றினுள் செம்மையாக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. மேலும் செம்மையாக்கத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள கணக்காய்வு கட்டண ஒதுக்கம் ரூபா 75,000 கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்காக கிடைத்த வட்டி வருமானம் ரூபா 121,196 கூடுதலாக முதலீட்டு நடவடிக்கையின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. | கணிப்பீட்டின் அடிப்படையில் வட்டி வருமானம் காசுப்பாய்ச்சல் கூற்றில் காண்பிக்கப்பட்டுள்ளது. செயற்படு மூலதன மாற்றம் தேறிய வேறுபாடு உள்ளடக்கப்பட்டுள்ளதால் செலுத்த வேண்டிய மீதி வித்தியாசம் காண்பிக்கப்படும். | |

**1.5.2 கணக்கீட்டு குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சூழல்சார் உயர் தொழிலாளர்கள் நிறுவனத்திற்கு அன்பளிப்பாக 2025 ஆகஸ்ட் 26 ஆம் திகதி கிடைத்த அச்சுப் பொறியின் நியாயமான பெறுமதியை மதிப்பிட்டு கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அன்பளிப்பாக கிடைத்த இந்த சொத்தை சந்தை பெறுமதிக்கு மதிப்பிட்டு நிதிக்கூற்றுக்குள் சீராக்க நடவடிக்கை எடுக்க வெண்டும். | அன்பளிப்பாக கிடைத்த சொத்துக்களின் நியாயமான பெறுமதியை கணக்கீடு செய்ய வேண்டும். |
| (ஆ) | பேரேட்டு கணக்குகள் பிரகாரம் மற்றும் பரீட்சை மீதியின் பிரகாரம் மீளாய்வாண்டு இறுதியில் கையிருப்பு காசு (சிறு செலவு காசு) மற்றும் பிரயானச் செலவு மீதிகள் முறையே ரூபா 23,987 மற்றும் ரூபா 97,728 ஆன போதும் நிதிக்கூற்றுக்கள் பிரகாரம் அம் மீதிகள் முறையே ரூபா 38,987 மற்றும் ரூபா 93,254 ஆக காட்டப்பட்டு இருந்தது. பரீட்சை மீதியில் காட்டப்படும் ரூபா 17,500 ஆன பாடநெறி கட்டண செலவு நிதிகூற்றுக்களில் உள்ளடங்கியிருக்கவில்லை. அதனால் மீளாய்வாண்டு இறுதியில் சொத்து மீதி ரூபா 15,000 கூடுதலாகவும் ஆண்டின் செலவு ரூபா 21,974 குறைத்தும் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2026 ஆண்டின் சிறு செலவு காசு மற்றும் பிரயானச் செலவு சரியாக கணக்கீடு செய்யப்படும். | கொடுக்கல் வாங்கல்களை பேரேட்டுக் கணக்குகளில் குறிப்பிட்டு பேரேட்டு கணக்குகளின் மீதிகளை சரியாக நிதிக்கூற்றுக்களிற்கு எடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | நிதிக்கூற்றுக்கள் பிரகாரம் ஆண்டின் வட்டி வருமானம் ரூபா 958,392 ஆகவும், பெற வேண்டிய வட்டி வருமானம் ரூபா 420,164 ஆகவும் கணக்கீடு செய்யப்பட்டிருந்த பொதும் கணக்காய்வின் கணிப்பீட்டின் பிரகாரம் ஆண்டின் வட்டி வருமானம் ரூபா | நிலையான வைப்பு முதிர்வு நாட்களின் எண்ணிக்கையின் அடிப்டைடயிலான கணிப்பீடுகளில் வித்தியாசம் உள்ளது. இதை நிதிக்கூற்றுக்களில் சீராக்கம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் | பெற வேண்டிய வருமானங்களை சரியாக கணிப்பிட்டு கணக்கீடு செய்ய வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 999,154 உம் பெற வேண்டிய வட்டி வருமானம் ரூபா 386,949 உம் ஆனது. அதன் பிரகாரம் ஆண்டின் இலாபம் ரூபா 40,762 இனால் குறைவாக மதிப்பிட்டிருந்ததுடன் நடைமுறை சொத்துக்கள் ரூபா 33,215 இனால் மிகை மதிப்பீடாகி இருந்தது. | | |
| (ஈ) | மீளாய்வாண்டில் பரீட்சை மீதி மற்றும் நிதிக்கூற்று குறிப்புகளில் பிரகாரம் அங்கத்துவ கட்டண வருமானம் ரூபா 3,440,395 ஆன போதும் அது வருமான கூற்றில் ரூபா 3,431,395 ஆக ரூபா 9,000 குறைத்து காட்டியமையால் ஆண்டின் இலாபம் அப் பெறுமானத்தால் குறைத்து மதிப்பிடப்பட்டிருந்தது. | அனைத்து வருமானமும் நிதிக்கூற்றுக்களில் சரியாக உட்படுத்தப்பட்டுள்ளதுடன் ரூபா 9,000 கணக்கீடு செய்ய இயலாது போயுள்ளது. | அனைத்து கணக்கு மீதிகளையும் சரியாக நிதிக்கூற்றுக்களில் உட்படுத்த வேண்டும். |
| (உ) | கடந்த ஆண்டின் வருமான வரி நிதி ஏற்பாடான ரூபா 218,794 ஆன தொகை போதாததால் அதனை ரூபா 349,620 இனால் அதாவது ரூபா 568,414 ரூபா வரை அதிகரிக்கப்பட்டு இருந்ததுடன் அந்த சிராக்கத்தை நிறுத்தி வைத்த இலாபத்திற்கு சீராக்குவதற்கு பதிலாக நடைமுறை ஆண்டின் வரிச் செலவிற்கு சீராக்கியதால் நடைமுறை ஆண்டின் வரிச் செலவு ரூபா 349,620 இனால் மிகை அளவாக இருந்ததுடன் நிறுத்தி வைத்த ஈட்டுதல் மீதி அப்பெறுமானத்தால் குறை மதிப்பீடாக இருந்தது. | 2024 குத்தகை வருமானம் ஒதுக்கீடு போதாததால் குறை ஒதுக்கீடாக இனங்காணப்பட்ட வரி வருமானம் சீராக்கப்பட்டுள்ளது. சரி செய்ய இணங்குகிறேன். | நிதியாண்டிற்குரிய செலவுகளை சரியாக இனங்கண்டு கணக்கிடு செய்ய வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 2,710,467 தொகையான மிகை ஆனதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 5,819,003 தொகையானது.அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 3,108,536 தொகையான வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இந்த விழ்ச்சிக்கு ஆண்டின் மொத்த வருமானம் ரூபா 8,373,416 இனால் குறைந்தமை பிரதான காரணங்களாக இருந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவச் செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சூழல்சார் உயர் தொழிலாளர்களினது நிறுவனத்தின் அலுவலக வளவை 2006 ஆண்டு முதல் மத்திய சுற்றாடல் அதிகார சபைக்கு சொந்தமான 144 சதுர அடி | இது இன்னும் கலந்துரையாடல் நிலையில் காணப்படுவதுடன் இறுதி இணக்கப்பாட்டிற்கு வரவில்லை. | அலுவலகத்தை நடாத்திச்செல்வது தொடர்பாக உடன்படிக்கையொன்றை கைச்சாத்திட நடவடிக்கை எடுக்க |

| | | |
|---|---|---|
| கொண்ட நிலப்பகுதிக்குள் நடாத்தி செல்வதுடன் அதற்குரிய சட்டரீதியான இணக்கப்பாடு இரு தரப்பினராலும் இது வரை ஏற்பட்டுத்திக்கொண்டு இருக்கவில்லை. | | வேண்டும். |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 நோக்கங்கள் மற்றும் கூட்டிணைந்த திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சூழல்சார் தொழிலில் கௌரவத்தை மற்றும் வரவேற்பை பாதுகாத்து மற்றும் மேம்படுத்தி, கல்வி, ஆராய்ச்சி மற்றும் விஞ்ஞான ரீதியான அறிவை பயன்படுத்துவதன் மூலம் சூழல் முகாமைத்துவத்தின் உயர் தொழில் நியமங்கள் பேணிச் செல்வதற்கு பங்கேற்றல் பொன்ற பிரதான நோக்கத்தை மேற்கொள்வதற்காக நிறுவனத்தின் பிரதான பணிப்பொறுப்புகளை மேற்கொள்வதற்காக செயல்நடவடிக்கை திட்டமொன்றை தயாரித்திருக்கவில்லை. மீளாய்வாண்டில் நிறுவனத்தினால் தொழில் தகைமைகளுடைய 137 புது அங்கத்தவர்களுக்கு அங்கத்துவத்தை வழங்கப்பட்டமை, 102 உத்தியோகத்தர்களுக்கு தொழில் அபிவிருத்தி மற்றும் 02 பயிற்ச்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டமை, 03 ஆராய்ச்சி வெளியீடுகள் அச்சிட்டு வெளியிடுவது மற்றும் அம்புலுவாவ பல்லுயிர் மதிப்பீட்டுக்குரிய ஆராய்ச்சி செய்தல் மற்றும் ஆவணப்படுத்துவதற்கு உதவுதல் போன்ற செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. | கருத்துரை வழங்கப்படவில்லை. | வருடாந்த செயல்நடவடிக்கை திட்டத்தை தயாரித்து சட்டத்தின் குறிப்பிடப்படும் நோக்கங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வெண்டும். |